# தாமரை வாசகம்

OFFICE OF THE REGISTRAR ...
20 SEP 1956
MADRAS

இரண்டாம் புத்தகம்

டாக்டர்
மா. இராசமாணிக்கம்,
M.A., L.T., M.O.L., PH.D.

975
3-56
TB
031(2)
N56

1938

...னல் பப்ளிஷிங் கம்பெனி
...ண்டி செட்டி தெரு, சென்னை-1

அணா 6

# தாமரை வாசகம்

## இரண்டாம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

டாக்டர் மா. இராசமாணிக்கம்,
M.A., L.T., M.O.L., PH.D.
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1

பதிப்புரிமை]

[விலை அணா 6

முதற் பதிப்பு (Revised)—1954
இரண்டாம் பதிப்பு—1955
மூன்றாம் பதிப்பு—1956
நான்காம் பதிப்பு—Aug. 1956

J9
631(2)
N56

APPROVED FOR CLASS USE-DETAILED STUDY
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette dated 4-5-1955, Page 11]

தமிழ்நாடு அரசு ... சென்னை-600 008
135362

Kabeer Printing Works, Madras (3307)

# முகவுரை

**தாமரை வாசகம்—இரண்டாம் புத்தகம்** என்னும் இச்சிறு நூல் இரண்டாம் வகுப்புப் பிள்ளைகட்கு உரியது. முதல் வகுப்பு நூலாகிய அடிப்படைமீது இந்நூலாகிய சுவர் எழுப்பப்பட்டுள்ளது. பெரும்பாலும் முதல் வகுப்பிற் சொல்லப்பட்ட செய்திகளே வாக்கிய முறையில் படிக்கவும் எழுதவும் பயன்படுமாறு செய்யப்பட்டுள்ளன.

முதல் நூற் செய்திகளை நினைவுறுத்த முதல் மூன்று பக்கங்களிற் **படப் பயிற்சிகள்** தரப்பட்டுள்ளன. பாடங்களின் இடையிடையே பாடத் தொடர்பான பொருள்களின் நிறங்கள், சுவைகள், உறுப்புகளும் வேலைகளும்—என்பவை **பயிற்சிகள்** வாயிலாக விளக்கப்பட்டுள்ளன. **படம்** சேர்த்துப் படித்தல், **படம்** பார்த்துக் கதை சொல்லல், **படம்** பார்த்து நிகழ்ச்சி கூறல் என்பனவும் பயிற்சிகளாகத் தரப்பட்டுள்ளன.

இடங்கட்கு ஏற்ற முறையில் **பழம் பாடல்கள், பாரதியார் பாடல்கள்** என்பன பட விளக்கத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பாடங்களின்கீழ்ப் **பயிற்சிகள்** இடம் பெற்றுள்ளன.

நூலின் இறுதியில் புதிய சொற்கள் சேர்க்கப் பட்டுள்ளன. அவற்றுட் பல, முதல் வகுப்புச் சொற்களின் அடிப்படை கொண்டவை என்பது கவனிக்கத்தக்கது.

சுருங்கக் கூறின், இச்சிறு நூல் இரண்டாம் வகுப்புப் பிள்ளைகட்குத் தமிழ் விருந்தாகி, அவர்க்குத் தமிழ் அறிவையும் பொது அறிவையும் ஊட்ட வல்லது என்னலாம். அறிஞர் உலகம் இதனை ஆசீர்வதிக்கும் என்று நம்புகிறேன்.

தியாகராசர் கல்லூரி,
மதுரை.

மா. இராசமாணிக்கம்

## உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எங்கள் வீடு | ... | 5 |
| 2. | எங்கள் பூந்தோட்டம் | ... | 6 |
| 3. | எங்கள் பழத்தோட்டம் | ... | 7 |
| | **பயிற்சி—1** | | |
| | நிறங்கள் | ... | 8 |
| | **பயிற்சி—2** | | |
| | சுவைகள் | ... | 9 |
| 4. | எங்கள் குடும்பம்—1 | ... | 10 |
| 5. | எங்கள் குடும்பம்—2 | ... | 12 |
| 6. | எங்கள் குடும்பம்—3 (பாட்டு) | ... | 14 |
| | **பயிற்சி—3** | | |
| | உறுப்புகளும் வேலைகளும் | ... | 16 |
| 7. | எங்கள் ஊர் | ... | 18 |
| | **பயிற்சி—4** | | |
| | தோப்பு, தோட்டம், காடு, சோலை | ... | 19 |
| 8. | எங்கள் பள்ளி | ... | 22 |
| 9. | பள்ளி விளையாட்டுகள் | ... | 23 |
| 10. | கிராம அதிகாரிகள் | ... | 24 |
| 11. | கிராமத் தொழிலாளிகள் | ... | 25 |
| | **பயிற்சி—5** | | |
| | படம் சேர்த்துப் படித்தல் | ... | 27 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 12. | கடிகாரம் | ... | 29 |
| 13. | சூரியன் | ... | 32 |
| 14. | சந்திரன் | ... | 34 |
| 15. | திசைகள் | ... | 36 |
| 16. | மழை | ... | 38 |
| 17. | உச்சரிப்பு : ல—ள—ழ, ர—ற, ன—ண | | 40 |
| | **பயிற்சி—6** | | |
| | குல்லாய் வியாபாரி | ... | 41 |
| 18. | வீட்டுப் பொருள்கள் | ... | 42 |
| 19. | வீட்டு விலங்குகள் | ... | 44 |
| 20. | பூனைப் பாட்டு | ... | 48 |
| 21. | பறவைகள் | ... | 49 |
| 22. | சேவல் பாட்டு | ... | 52 |
| 23. | மரங்கள் | ... | 54 |
| 24. | காய்கறித் தோட்டம் | ... | 57 |
| 25. | நாணயங்கள் | ... | 59 |
| 26. | பழக்கடை | ... | 61 |
| | **பயிற்சி—7** | | |
| | தீபாவளிப் பண்டிகை | ... | 64 |
| 27. | பூப்பாட்டு | ... | 66 |
| 28. | ஆத்தி சூடி | ... | 67 |
| 29. | உலக நீதி | ... | 68 |
| 30. | தமிழ் நாட்டு வணக்கம் | ... | 70 |
| | புதிய சொற்கள் | ... | 71 |

# இரண்டாம் புத்தகம்

## பாட்டு

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

—பாரதியார்

படங்களின் பெயர்களை எழுது :—



படம் பார்த்து விடுபட்ட எழுத்தை எழுதிப்படி:-

| | | | |
|---|---|---|---|
|  | அ-ம் |  | ந-ம் |
|  | -யல் | | -டம் |
|  | ப--ம் |  | ர-ப- |
|  | -று-பு | | -ண் |
|  | திரா- |  | -ட்- |

ஒரு படத்துக்கு ஒரு வாக்கியம் எழுது :



# 1. எங்கள் வீடு



1. இந்த வீடு எங்கள் வீடு.
2. எங்கள் வீடு கூரை வீடு.
3. வீட்டில் பல சன்னல்கள் உண்டு.
4. சன்னல்கள் வழியே காற்று வீசும்.
5. சன்னல்கள் வழியே வெளிச்சம் வரும்.
6. வீட்டின் முன்புறம் பூந்தோட்டம்.
7. வீட்டின் பின்புறம் பழத்தோட்டம்.

# 2. எங்கள் பூந்தோட்டம்



1. இதுதான் எங்கள் பூந்தோட்டம்.
2. பூந்தோட்டத்தில் செடிகள் உண்டு.
3. பூந்தோட்டத்தில் கொடிகள் உண்டு.
4. மல்லிகை, ரோஜா, சாமந்தி, சூரிய காந்தி—செடிகள் ஆகும்.
5. தாமரை, முல்லை—கொடிகள் ஆகும்.
6. தாமரைப் பூ நீரில் பூக்கும்.
7. தாமரைப் பூ பெரியது.
8. ரோஜாப் பூ சிறியது.
9. கமலம் பூ பறிக்கிருள்.

# 3. எங்கள் பழத்தோட்டம்

1. இதுதான் எங்கள் பழத்தோட்டம்.
2. பழத்தோட்டத்தில் மரங்கள் உண்டு.
3. பழத்தோட்டத்தில் செடிகள் உண்டு.
4. பழத்தோட்டத்தில் கொடிகள் உண்டு.
5. வாழை, மா, பலா, ஆரஞ்சு, மாதுளை, கொய்யா—மரங்களில் பழுக்கும்.
6. தக்காளி என்பது செடியில் பழுக்கும்.
7. திராக்ஷை என்பது கொடியில் பழுக்கும்.
8. நாங்கள் பழங்களைப் பறிக்கிறோம்.
9. நாங்கள் பழங்களைத் தின்னுகிறோம்.

## பயிற்சி 1

# நிறங்கள்

I. கட்டங்களில் உள்ள சொற்களைக் கோடிட்ட இடங்களில் சரியாக அமைத்து வாசி.

| | | |
|---|---|---|
| நீலம் | மஞ்சள் | சிவப்பு |
| கருமை | பச்சை | வெண்மை |

1. கிளி —— நிறம்.
2. மிளகாய் வற்றல் —— நிறம்.
3. சாமந்தி —— நிறம்.
4. ஆகாயம் —— நிறம்.
5. சங்கு —— நிறம்.
6. காகம் —— நிறம்.

II. வாழை இலை, ஆலம்பழம், அடுப்புக்கரி, வெள்ளித் தட்டு, பொன் வளையல், கடல். —இவற்றின் நிறங்கள் எவை ?

III. பால், முருங்கைக்காய், இரத்தம், மஞ்சள், நாகப்பழம்.—இவற்றின் நிறங்கள் எவை?

## பயிற்சி 2

## சுவைகள்

I. கட்டங்களில் உள்ள சொற்களைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமாக அமைத்து வாசி.

| | | |
|---|---|---|
| காரம் | புளிப்பு | கசப்பு |
| துவர்ப்பு | உவர்ப்பு | இனிப்பு |

1. கரும்பு——.
2. பாக்கு——.
3. மாங்காய்——.
4. உப்பு——.
5. மிளகாய்——.
6. பாகற்காய்——.

II. மிட்டாய், வேப்பங்காய், இஞ்சி, நெல்லிக்காய், புளியங்காய், உப்பு.—இவற்றின் சுவைகளைச் சொல்.

III. நிறமும் சுவையும் சொல் :—

பால், தேன், பலாச்சுளை,

மாங்கொட்டைப்பருப்பு, லட்டு,

எலுமிச்சம்பழம், வெல்லம், மிளகு.

# 4. எங்கள் குடும்பம்—1

1. இவர் எங்கள் தகப்பனர்.
2. அவர் எங்கள் தாயார்.
3. இவர்கள் எங்கள் பெற்ருேர்கள்.
4. நாங்கள் இவர்கள் பிள்ளைகள்.
5. இவன் என் அண்ணன்.

6. அவன் என் தம்பி.
7. இவள் என் அக்காள்.
8. அவள் என் தங்கை.
9. நாங்கள் எழுவர் இருக்கிறோம்.
10. இது எங்கள் குடும்பம்.

## பயிற்சி

பதில் சொல் :—

1. உன் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் ?
2. உன் தகப்பனார் பெயர் என்ன ?
3. அவர் என்ன வேலை செய்கிறார் ?
4. உன் வீட்டில் நீ என்ன வேலைகளைச் செய்கிறாய் ?
5. உனக்குத் தெரிந்த விளையாட்டுகள் எவை ?

# 5. எங்கள் குடும்பம்—2



1. தகப்பனர் பணம் சம்பாதிக்கிருர் ;
   எங்களுக்குப் பாடம் கற்பிக்கிருர்.

2. தாயார் சமையல் செய்கிருர் ;
   எங்களுக்கு வேண்டுவன
   செய்கிருர்.

3. அண்ணன் படிக்கிருன் ;
   வீட்டு வேலே செய்கிருன்.

4. அக்காள் படிக்கிறாள்;
வீட்டு வேலை செய்கிறாள்.

5. நான் படிக்கிறேன்;
விளையாடுகிறேன்.

6. தம்பியும் தங்கையும்
விளையாடுகிறார்கள்.

**பயிற்சி**

**பதில் சொல் :—**

1. உனக்கு வீட்டில் யார் யார் பாடம் கற்பிக்கிறார்கள்?

2. உன் அண்ணன் என்ன வேலைகளைச் செய்கிறான்?

3. உன் அக்காள் என்ன வேலைகளைச் செய்கிறாள்?

4. உன் தாயார் என்ன வேலைகளைச் செய்கிறார்?

5. உன் வீட்டில் பாட்டனார், பாட்டியார் இருக்கிறார்களா?

# 6. எங்கள் குடும்பம்—3



# குடும்பம்—3

## பாட்டு

1. ஒற்றைக் குடும்பம் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை.
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.

2. ஏவல்கள் செய்பவர் மக்கள்—இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ ?
மேவி அனைவரும் ஒன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

—பாரதியார்

## பயிற்சி 3

# உறுப்புகளும் வேலைகளும்



படத்தைப் பார்; கட்டங்களில் உள்ள சொற்களைக் கோடிட்ட இடங்களில் பொருத்தமாக எழுது :-

| | |
|---|---|
| செய்கிறோம் | நடக்கிறோம் |
| பார்க்கிறோம் | வணங்குகிறோம் |
| பேசுகிறோம் | சுவைக்கிறோம் |
| கேட்கிறோம் | முகர்கிறோம் |

1. நாம் தலையால் ——.
2. நாம் கண்களால் ——.
3. நாம் காதுகளால் ——.
4. நாம் மூக்கினால் ——.
5. நாம் வாயினால் ——.
6. நாம் நாவினால் ——.
7. நாம் கைகளால் ——.
8. நாம் கால்களால் ——.

# 7. எங்கள் ஊர்




1. எங்கள் ஊர் திங்களூர்.
2. ஊரில் பல தெருக்கள் உண்டு.
3. ஊரில் எண்பது வீடுகள் உண்டு.
4. ஊரில் பெரிய கோவில் உண்டு.
5. ஊரார் குளிக்கக் குளம் உண்டு.
6. ஊரார் பேசச் சாவடி உண்டு.
7. பிள்ளைகள் படிக்கப் பள்ளி உண்டு.
8. ஊரைச் சுற்றித் தோப்புகள் உண்டு.
9. தோப்புகள் சுற்றி வயல்கள் உண்டு.
10. எங்கள் ஊருக்கு வாருங்கள்.

## பயிற்சி 4

தோப்பு                    தோட்டம்

| | |
|---|---|
| மாந்தோப்பு | கரும்புத் தோட்டம் |
| புளியந் தோப்பு | வெற்றிலைத் தோட்டம் |
| கொய்யாத் தோப்பு | பூந்தோட்டம் |
| பலாத் தோப்பு | திராக்ஷைத் தோட்டம் |
| தென்னந் தோப்பு | தேயிலைத் தோட்டம் |

வாழைத் தோட்டம்

காடு　　　　சோலை

பனங் காடு　　　　பூஞ் சோலை

வேலங் காடு　　　　மாஞ் சோலை

ஆலங் காடு

ஆர்க் காடு

(ஆர்—ஆத்திமரம்)

## பயிற்சி

I. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. பலாத்———பலாக்காய் கிடைக்கும்.
2. வெற்றிலைத்—வெற்றிலை கிடைக்கும்.
3. ஆலங்———ஆல இலை கிடைக்கும்.
4. மாஞ்———மாங்காய் கிடைக்கும்.

II. கரும்பு, பூ, நுங்கு, திராக்ஷை.—இவை எங்கு எங்குப் பயிராகும் ?

III. வெற்றிலை, பூ, தேயிலை, ஆலமரம்.—இவற்றின் உபயோகம் என்ன ?

IV. இவற்றைப் படி :—

தென்னை + தோப்பு = தென்னந்தோப்பு
பலா + தோப்பு = பலாத் தோப்பு
பனை + காடு = பனங் காடு
பூ + தோட்டம் = பூந்தோட்டம்
புளி + தோப்பு = புளியந்தோப்பு

# 8. எங்கள் பள்ளி



1. திங்களூரில் பள்ளி உண்டு.
2. பள்ளியில் ஐந்து வகுப்புகள் உண்டு.
3. பள்ளியில் நூறு பிள்ளைகள் படிக்கிறார்கள்.
4. அவர்களில் ஐம்பது பேர் பெண்கள்.
5. நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.
6. எங்கள் பள்ளி காலையில் தொடங்கும்.
7. எங்கள் பள்ளி மாலையில் முடியும்.
8. எங்கள் ஆசிரியர் நல்லவர்.
9. நாங்கள் நன்றாய்ப் படிக்கிறோம்.
10. நாங்கள் நன்றாய் விளையாடுகிறோம்.

# 9. பள்ளி விளையாட்டுகள்

1. நாங்கள் நன்ருய் ஓடுவோம்.
2. ஆண்கள் கால்பந்து ஆடுவார்கள்.
3. பெண்கள் கைப்பந்து ஆடுவார்கள்.
4. ஆண்கள் ஓடித் தாண்டுவார்கள்.
5. பெண்கள் ஊஞ்சல் ஆடுவார்கள்.
6. ஆண்கள் வட்டம் ஆட்டம் ஆடுவார்கள்.
7. பெண்களும் அதே ஆட்டம் ஆடுவார்கள்.
8. பெண்கள் கும்மி அடிப்பார்கள்;
   கோலாட்டம் ஆடுவார்கள்.

# 10. கிராம அதிகாரிகள்



1. இது எங்கள் கிராமச் சாவடி.
2. எழுதுகின்றவர் கணக்கப் பிள்ளை.
3. எதிரில் இருக்கிறவர் மணியக்காரர்.
4. தலையாரியும் வெட்டியானும் நிற்கின்றனர்.
5. மணியக்காரர் நிலவரி வசூலிப்பார்.
6. கணக்கப்பிள்ளை கணக்கு எழுதுவார்.
7. மணியக்காரர் வழக்குகளையும் விசாரிப்பார்.
8. கணக்கப்பிள்ளை வரிவசூலுக்கும் போவார்.
9. இந்த இருவர் இடும் வேலைகளை வெட்டியானும் தலையாரியும் செய்வார்கள்.

# 11. கிராமத் தொழிலாளிகள்



1. தச்சர் மரவேலை செய்வார்; கலப்பை, வண்டி, பெட்டி முதலியன செய்வார்.

2. தட்டார் பொன்னாலும் வெள்ளியாலும் நகைகளும் பாத்திரங்களும் செய்வார்.

3. கருமான் இரும்புவேலை செய்வார்; மண்வெட்டி, அரிவாள் முதலியன செய்வார்.

4. கன்னார் செம்பு, பித்தளை, ஈயம் இவற்றால் பாத்திரங்கள் செய்வார்.

5. நெசவாளி வேட்டி, துண்டு, புடைவை முதலியன நெய்வார்.

6. சட்டி, பானை முதலியன செய்பவர் மண்பாண்டத் தொழிலாளி.

7. துணியின் அழுக்கைப் போக்கி அழகு செய்பவர் சலவைத் தொழிலாளி.

8. செக்கார் எண்ணெய் ஆட்டுவார்; நல்லெண்ணெய் முதலியன விற்பார்.

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

—பாரதியார்

## பயிற்சி

படம் சேர்த்துப் படி; பிறகு எழுது.

1. கண்ணன் நல்ல

2. கண்ணன் மேய்ப்
பவன்.

3. அவன்
ஆடுகளுடன் சென்றுன்.

4. அவனுடன் சென்றது.

5. காட்டில் ஒரு வந்தது.

6. ஆடுகள் பார்த்துக் கத்தின.

7. ஓநாயை விரட்டியது.

8. கண்ணன் நாயைத்

## 12. கடிகாரம்



1. **கடிகாரம்** மணி பார்க்க உதவும். சுவரில் மாட்டும் கடிகாரம் பெரியது; மேசை மேல் வைக்கும் கடிகாரம் சிறியது; கைக் கடிகாரம் மிகச் சிறியது.

2. கடிகாரத்தில் ஒன்று முதல் பன்னிரண்டு எண்கள் இருக்கின்றன. இரண்டு எண்களுக்கு நடுவில் ஐந்து சிறு கோடுகள் இருக்கின்றன. அவை மொத்தம் அறுபது இருக்கின்றன. ஒவ்வொரு சிறு கோடும் ஒரு **நிமிஷம்** என்னும் நேரத்தைக் குறிப்பது.

3. பெரிய முள் பன்னிரண்டு என்னும் எண்ணிலிருந்து புறப்பட்டு வலப் பக்கமாய் வந்து மீண்டும் பன்னிரண்டை அடையும் நேரம் அறுபது நிமிஷம் அல்லது **ஒரு மணி** என்று சொல்லப்படும். அப்பொழுது சிறிய முள் ஒரு எண்ணிலிருந்து மற்றோர் எண்ணுக்கு நகரும்.

4. சிறிய முள் காலையில் ஆறிலும் பெரிய முள் பன்னிரண்டிலும் இருந்தால், அப்பொழுது காலை **மணி ஆறு** என்று சொல்லுகிறோம். சிறிய முள் ஆறிலிருந்து புறப்பட்டு ஏழு, எட்டு வழியாகச் சுற்றிக்கொண்டு பன்னிரண்டில் நிற்கும். அப்பொழுது **நடுப் பகல்** என்று சொல்லுகிறோம். சிறிய முள் பன்னிரண்டில் இருந்து நகர்ந்து ஆறில் வந்து நிற்கும் பொழுது **பகல்** முடிந்து, **இரவு** ஆரம்பிக்கிறது.

5. சிறிய முள் மீண்டும் பன்னிரண்டில் வந்து நிற்கும். அப்பொழுது **நடு இரவு** என்று சொல்லுகிறோம்.

சிறிய முள் மீண்டும் ஆறில் வந்து நிற்கும் பொழுது **காலை ஆறு மணி** என்று சொல்லுகிறோம்.

6. காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரையில் உள்ள பன்னிரண்டு மணி நேரத்தைப் **பகல்** என்று சொல்லுகிறோம். மாலை ஆறு மணி முதல் காலை ஆறு மணி வரையில் உள்ள பன்னிரண்டு மணி நேரத்தை **இரவு** என்று சொல்லுகிறோம். இருபத்து நான்கு மணி நேரத்தை ஒரு **நாள்** என்கிறோம்.

## பயிற்சி

**பதில் சொல் :—**

1. சிறிய முள் எதனைக் காட்டும் ?
2. பெரிய முள் எதனைக் காட்டும் ?
3. மூன்றரை மணி: இப்பொழுது பெரிய முள் எங்கு இருக்கும் ? சிறிய முள் எங்கு இருக்கும் ?
4. ஒரு மணிக்கு எத்தனை நிமிஷங்கள் ?
5. எத்தனை மணிகளைக் கொண்டது ஒரு நாள் ?
6. எது பகல் ? எது இரவு ?
7. நீ பகலில் என்ன செய்வாய் ?
8. நீ இரவில் என்ன செய்வாய் ?

# 13. சூரியன்



1. சூரியன் காலையில் தோன்றும்.
2. அது நடுப்பகலில் உச்சியில் இருக்கும்.
3. சூரியன் மாலையில் மறையும்.
4. அது மறைந்ததும் இரவு வரும்.
5. சூரியன் பகலில் காயும்.
6. சந்திரன் இரவில் காயும்.
7. பகலும் இரவும் சேர்ந்தது ஒரு நாள்.
8. ஏழு நாட்கள் கொண்டது ஒருவாரம்.
9. ஒவ்வொரு நாளும் கிழமை எனப் படும்.

10. ஒரு வாரத்தில் ஏழு கிழமைகள் உண்டு.

11. அவை யாவை ?

1. ஞாயிறு — ஞாயிற்றுக் கிழமை
2. திங்கள் — திங்கட் கிழமை
3. செவ்வாய் — செவ்வாய்க் கிழமை
4. புதன் — புதன் கிழமை
5. வியாழன் — வியாழக் கிழமை
6. வெள்ளி — வெள்ளிக் கிழமை
7. சனி — சனிக் கிழமை

12. முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம்.

13. பன்னிரண்டு மாதங்கள் சேர்ந்தது ஓர் ஆண்டு அல்லது வருஷம் எனப்படும்.

14. பன்னிரண்டு மாதங்களின் பெயர்கள் :—

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாசி
7. ஐப்பசி
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி

# 14. சந்திரன்



1. சந்திரன் இரவில் காயும்.
2. சந்திரன் ஒளியை நிலவு என்கிறோம்.
3. நிலவு குளிர்ச்சியாய் இருக்கும்.
4. சந்திரன் உருவம் நாளும் மாறும்.
5. சந்திரனை தெரியாத நாள் உண்டு.
6. அந்த நாளை அமாவாசை என்கிறோம்.
7. பிறகு சந்திரன் வளரத் தொடங்கும்.
8. வளரும் சந்திரனை வளர்பிறை என்கிறோம்.
9. பதினைந்தாம் நாள் முழுச் சந்திரனைப் பார்க்கிறோம்.

10. அந்த நாளைப் பௌர்ணமி என்கிறோம்.
11. பிறகு சந்திரன் தேயத்தொடங்கும்.
12. குறையும் சந்திரனைத் தேய்பிறை என்கிறோம்.
13. பதினைந்தாம் நாள் அமாவாசை.
14. வளர்பிறையும் தேய்பிறையும் மாறி மாறி வரும்.

### பயிற்சி

I. அமாவாசை, பௌர்ணமி, நிலவு, வளர்பிறை, தேய்பிறை, குளிர்ச்சி.—இவற்றைப் பொருத்தமான இடங்களில் நிரப்பிப்படி :—

1. சந்திரன் தெரியாத நாளை ——— என்கிறோம்.
2. வளரும் சந்திரனை ——— என்கிறோம்.
3. முழு நிலவு நாளைப் ——— என்கிறோம்.
4. குறையும் சந்திரனைத் ——— என்கிறோம்.
5. சந்திரன் ஒளியை ——— என்கிறோம்.
6. நிலவு ——— யாய் இருக்கும்.

II. 1. முழு நிலா இரவைப் பற்றி நீ அறிந்ததைச் சொல்.

2. அமாவாசை இரவைப் பற்றி நீ அறிந்ததைச் சொல்.

# 15. திசைகள்




1. சூரியன் காலையில் தோன்றுகிறது.
2. அது தோன்றும் திசை கிழக்கு.
3. சூரியன் மாலையில் மறைகிறது.
4. அது மறையும் திசை மேற்கு.
5. நீ கிழக்குப் பக்கம் நில்.
6. உன் கைகளை நேராக நீட்டு.
7. உன் வலக்கைப் பக்கம் தெற்கு.
8. உன் இடக்கைப் பக்கம் வடக்கு.
9. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு— இவை நான்கு திசைகள் எனப் படும்.

## பயிற்சி

I. விடை எழுது :—

1. சூரியன் தோன்றும் பக்கம் எது ?

2. உன் பள்ளி எந்தத் திசையில் இருக்கிறது ?

3. சூரியனைப் பார்த்து நீ நின்றால் உன் வீடு எந்தத் திசையில் இருக்கிறது ?

4. நீ எந்தப் பக்கம் பார்த்துச் சாப்பிடுகிறாய் ?

5. நீ எந்தப் பக்கம் தலைவைத்துப் படுக்கிறாய் ?

II. காலை × மாலை, பகல் × இரவு,
கிழக்கு × மேற்கு, வடக்கு × தெற்கு,
சூடு × குளிர்ச்சி, வெயில் × நிலவு.

—இவற்றை வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

(ஆசிரியர் பழக்குவாராக)

III. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி :—

1. சூரியன் காலையில் ——— தோன்றுகிறது.

2. ———மாலையில் ——— மறைகிறது.

3. சூரியன் ——— திசை கிழக்கு.

4. சூரியன் ——— திசை ———.

# 16. மழை

1. சூரியன் பகலில் காயும்.
2. ஆனால்இன்று சூரியன் தெரியவில்லை.
3. மேகங்கள் சூரியனை மறைத்துவிட்டன.
4. வானம் இருண்டு இருக்கிறது.
5. வானத்தில் மின்னல் தோன்றுகிறது.
6. இடி இடிக்கிறது ; இடி ஓசை கேள்.
7. மழை பெய்கிறது ; மழைத் துளி பார்.
8. மழை விடாமல் பெய்கிறது.
9. காற்று ஜில்லென்று வீசுகிறது.

10. தெருவில் தண்ணீர் ஓடுகிறது.
11. கமலம் காகிதக் கப்பல்கள் செய்கிருள்.
12. அவள் ஒன்றைத் தண்ணீரில் விடுகிருள்.
13. உனக்குக் கப்பல் செய்யத் தெரியுமா?

### பயிற்சி

I. பதில் சொல் :—

1. மழைக்கு முன் வானத்தில் காணப்படும் குறிகள் எவை?

2. கமலம் என்ன செய்கிருள்?

II. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து வாசி :—

1. வானம் ——— இருக்கிறது.
2. வானத்தில் ——— தோன்றுகிறது.
3. கமலம் ——— கப்பல் ——— .

III. இவற்றைப் படி :—

படகு சிறியது ; கப்பல் பெரியது.

காகிதப் படகு ; மரப் படகு.

காகிதக் கப்பல் ; மரக் கப்பல்.

படகு ஆற்றில் போகும்.

கப்பல் கடலில் போகும்.

## 17. உச்சரிப்பு

1. புலி காட்டில் வாழும்.
புளி மரத்தில் காய்க்கும்.

2. மணி ஒலி காதில் படுகிறது.
சூரியன் ஒளி கண்ணில் படுகிறது.

3. நாய் வால் நிமிர்த்த முடியாது.
வாள் மரத்தை அறுக்கும்.

4. மீன்கள் வலையில் அகப்படும்.
நண்டு வளையில் வாழும்.

5. இது ஆற்றின் கரை.
சட்டையில் கறை இருக்கிறது.

6. இது அடுப்புக் கரி.
மாங்காய் கறி சமைக்க உதவும்.

7. காய்கள் பலபல என்று உதிர்ந்தன.
வாள் பளபள என்று மின்னுகிறது.
அவன் வழவழ என்று பேசுகிறான்.

8. நெருப்பு கனகன என்று எரிகிறது.
மணி கணகண என்று அடிக்கிறது.

# பயிற்சி 6

## குல்லாய் வியாபாரி

படம் பார்த்துக் கதை சொல் :—



# 18. வீட்டுப் பொருள்கள்



1. இது கமலம் வீடு. இதில் மூன்று அறைகள் உண்டு. அவை படிப்பு அறை, படுக்கை அறை, சமையல் அறை என்பன.

2. படிப்பு அறையில் மேசை, நாற்காலி, சாய்வு நாற்காலி, கடிகாரம், புத்தகத் தட்டு இருக்கின்றன.

3. படுக்கை அறையில் கட்டில், மெத்தை, தலையணைகள், பாய்கள்,

பீரோ, கண்ணுடி, மேசை விளக்கு இருக்கின்றன.

4. சமையல் அறையில் அடுப்பு, அம்மி, குழவி, ஆட்டுக்கல், உறி, சட்டி, பானை, தவலை, குடம், அண்டா, கரண்டி, செம்பு, மணை, அரிவாள்மணை முதலியன இருக்கின்றன.

### பயிற்சி

I. பதில் சொல் :—

1. கமலத்தின் படிப்பறையில் என்ன பொருள்கள் இருக்கின்றன?

2. படுக்கை அறையில் இருக்கின்றவை யாவை?

3. சமையல் அறையில் இருக்கின்றவை யாவை?

II. இவை எந்த அறையில் இருப்பவை?

அரிவாள்மணை, புத்தகத் தட்டு, மெத்தை, பாய், தலையணை, குடம், சட்டி.

III. இவற்றின் பயனைக் கூறு :—

(1) உறி, (2) அரிவாள்மணை, (3) தவலை, (4) கண்ணுடி, (5) புத்தகத் தட்டு, (6) மேசை.

IV. இவற்றைப் படி :—

புத்தகம் + தட்டு = புத்தகத் தட்டு.
அடுப்பு + கரி = அடுப்புக் கரி.
காய் + கறி = காய் கறி.

# 19. வீட்டு விலங்குகள்



1. நிலத்தின் மீது பலவகை விலங்குகள் வாழ்கின்றன. அவற்றுள் சில வீடுகளில் வாழ்கின்றன ; சில காடு களில் வாழ்கின்றன. பசு, ஆடு, எருமை, எருது, குதிரை, கழுதை, நாய், பூனை என்பன வீட்டு விலங்குகள் ஆகும். சிங்கம், புலி, யானை முதலி யன காட்டு விலங்குகள் ஆகும்.

2. பசு மிகவும் பயன் தரும் விலங்கு. அது நமக்குப் பால் தரும்.

பால் சிறந்த உணவு ஆகும். பாலி லிருந்து தயிரும் மோரும் வெண்ணெயும் எடுக்கலாம். வெண்ணெயை உருக் கினல் நெய் ஆகும்.

3. பசுவைப் போலவே ஆடும் பயன் தரும் விலங்கு ஆகும். ஆட்டுப் பால் நமது உடம்புக்கு நல்லது. ஆட்டு மயிர் கம்பளம் நெய்ய உதவுகிறது.

4. எருமை மந்தமான விலங்கு. அதன் பால் நமக்குப் பயன்படுகிறது. ஆண் எருமை ஏர் உழ உதவும்.

5. எருது ஏர் உழவும், வண்டி இழுக்கவும் பயன்படும். சிலர் எருதுகள் மீது சாமான்களை ஏற்றிப் போவதும் உண்டு.

6. குதிரை எருதைப் போலவே வண்டி இழுக்கப் பயன்படும். குதிரை எருதை விட வேகமாய்ச் செல்லும். நாம் குதிரைமீது ஏறிச் சவாரி செய்யலாம். ஏர் உழுவதற்கும் குதிரை பயன் படுகிறது.

7. கழுதை சலவைத் தொழிலாளியிடம் இருக்கும். அது துணி மூட்டைகளைச் சுமந்து செல்லும்; சில இடங்களில் வேறு பொருள்களையும் சுமக்கும்.

8. வீட்டு விலங்குகளில் நாய் ஒன்று. அது நாம் செய்யும் உதவியை மறப்பதில்லை. அது நம்மிடம் அன்பு பாராட்டும்; அதற்கு அடையாளமாக வாலை ஆட்டும்; பணிவு காட்டும்; வீட்டைக் காக்கும்.

9. பூனை திருடும் பழக்கம் உடையது. அது வீட்டில் உள்ள எலிகளைப் பிடித்துத் தின்னும். பூனையின் ஓசை எலிகளை நடுங்கச் செய்யும்.

### பயிற்சி

I. பதில் சொல் :—

1. வீட்டு விலங்குகள் எவை ?
2. காட்டு விலங்குகள் எவை ?
3. வீட்டு விலங்குகளில் பால் தருவன எவை ?
4. வண்டி இழுப்பவை எவை ?
5. ஏர் உழுவன யாவை ?
6. பொருள்களைச் சுமந்து செல்வன யாவை ?

II. இவற்றைப் படி :—

1. பசு கதறும்.
2. ஆடு கத்தும்.
3. எருது முக்காரமிடும்.
4. குதிரை கனைக்கும்.
5. கழுதை கத்தும்.
6. நாய் குரைக்கும்.
7. பூனை சீறும்.
8. நரி ஊளையிடும்.
9. பன்றி உறுமும்.
10. யானை பிளிறும்.
11. புலி உறுமும்.
12. சிங்கம் கர்ச்சிக்கும்.

III. இவற்றை நினைவில் வை :—

1. பசுக் கன்று
2. ஆட்டுக் குட்டி
3. குதிரைக் குட்டி
4. பன்றிக் குட்டி
5. கழுதைக் குட்டி
6. நாய்க் குட்டி
7. பூனைக் குட்டி
8. நரிக் குட்டி
9. ஓநாய்க் குட்டி
10. யானைக் குட்டி
11. புலிக் குட்டி
12. சிங்கக் குட்டி

1. ஆடுகள் மந்தை மந்தையாக வருகின்றன.
2. மாடுகள் மந்தை மந்தையாகப் போகின்றன.

IV. இவற்றைப் படி :—

வீடு + விலங்குகள் = வீட்டு விலங்குகள்
காடு + விலங்குகள் = காட்டு விலங்குகள்
நாடு + விலங்குகள் = நாட்டு விலங்குகள்

# 20. பூனைப் பாட்டு



வெள்ளை நிறப் பூனை குட்டிகள் ஈன்றது.

1. சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலி னிறமொரு குட்டி.

2. எந்த நிறம்இருந் தாலும்—அவை
யாவும் ஒரே தரம் அன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும்—இது
ஏற்றமென் றும்சொல்ல லாமோ?

—பாரதியார்

# 21. பறவைகள்



1. காகம், குருவி, கோழி, சேவல், மயில், கிளி, கொக்கு என்பவை பறவைகள். அவை பறக்கும் காரணத்தால் பறவைக்ள் எனப் பெயர் பெற்றன. பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

2. காகம் மரத்தில் கூடுகட்டும். காகம் அழுகின பொருள்களைத் தின்னும்.

3. குருவி சிறிய பறவை. அதன் கூடு அழகாக இருக்கும். குருவி அரிசி முதலிய தானிய மணிகளைத் தின்னும்.

4. கோழி என்பது பெண் பறவை; சேவல் என்பது ஆண் பறவை. சேவலுக்குக் கொண்டை உண்டு. கோழி முட்டையிடும்; அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். கோழியும் சேவலும் தானியங்களைக் கொத்தித் தின்னும்; கால்களால் மண்ணைக் கிளறிப் புழுக்களையும் பூச்சிகளையும் அலகினால் கொத்தித் தின்னும். சேவல் விடியற் காலத்தில் கூவும்.

5. பறவைகளில் மிகவும் அழகானது மயில். அதன் தோகை அழகானது. மயில் தன் தோகையை விரித்து ஆடும். மயில் இறகுகளால் விசிறி செய்யப்படும்.

6. கிளி பச்சை நிறம் உடையது. அதன் மூக்கு சிவந்து இருக்கும். அது நாம் சொல்வதைத் திரும்பச் சொல்லும்.

பலர் கிளியைச் செல்வமாக வீடுகளில் வளர்ப்பார்கள்.

7. புறா அழகான பறவை. அது அசைந்து அசைந்து நடப்பது அழகாக இருக்கும்.

8. கொக்கு மிகவும் உயரமான பறவை. அதன் கால்கள் உயரமானவை; அலகும் நீண்டது. அது குளம் குட்டைகளுக்குப் பக்கத்தில் இருக்கும்; மீன்களைப் பிடித்துத் தின்னும்.

### பயிற்சி

I. பதில் சொல் :—

1. அழகிய பறவைகள் எவை?
2. மனிதர்க்குப் பயன்படும் பறவைகள் எவை?

II. இவற்றைக் கவனி :—

| | |
|---|---|
| 1. காகம் கரையும். | 4. குயில் கூவும். |
| 2. கோழி கூவும். | 5. கிளி கீச்சிடும். |
| 3. மயில் அகவும். | 6. ஆந்தை அலறும். |

III. இவற்றைக் கோடிட்ட இடங்களில் தக்கபடி அமைத்துப் படி :—

| | |
|---|---|
| கூட்டில் | கூண்டில் |

1. குருவி ——— வாழும்.
2. வளர்ப்பவர் வீட்டில் கிளி ——— வாழும்.

135362

# 22. சேவல்—பாட்டு



என்சேவல் போனஇடம்
எனக்குத்தெரி யாதே !
என்றன் துரை ரங்கசாமி
என்னசொல்லு வாரோ !

என்னசொல்லு வாரோ !
அவர்க் கிஷ்டமுள்ள சேவல் ;
இஷ்டமுள்ள சேவல்தனை
எவளோபிடித் தாளே !

நல்லசிறு தொட்டில்கட்டி
நான்வளர்த்த சேவல்
நான்வளர்த்த சேவல்தனை
நடுங்கவைத்தவள் யாரோ !

தங்கத்தினுல் சதங்கைகட்டித்
தரையில்விட்ட சேவல் ;
தரையில்விட்ட சேவல்தனைத்
தடுத்துக்கொண்டவள் யாரோ !

கோட்டைகொத்த ளங்கள்ஏறிக்
கூவிவரும் சேவல் ;
கூவிவரும் சேவலுக்குக்
கொடுமைசெய்தவள் யாரோ !

—சேவல் பாட்டு

### பயிற்சி

பதில் சொல் :—

1. சேவல் யாருடையது ?
2. அம்மை சேவலை எப்படி வளர்த்தாள் ?
3. சதங்கை என்பது யாது ?
4. சேவல் எவற்றின்மீது ஏறிக் கூவி வரும் ?
5. இப்பாட்டைப் பாடுகிற அம்மை யார் ?
6. சேவல், பெட்டைக்கோழி—இவற்றில் முட்டை இடுவது யாது ?
7. சேவல் எவற்றைத் தின்னும் ?
8. சேவல் பறவையா ? விலங்கா ?

# 23. மரங்கள்

1. வீட்டில் பயிராகும் மரங்களில் வாழை சிறந்தது. அதன் அடியில் அதன் கன்றுகள் தோன்றி வளரும். வாழையின் தண்டு, பூ, காய் கறி சமைக்க உதவும்; பழம் தின்ன உதவும்; இலையும் பட்டையும் உண்கலமாக உதவும். ஒரு சீப்பில் பல காய்கள் உண்டு. பல சீப்புகள் கொண்டது ஒரு தாறு.

2. மா மரம் நிழல் தரும். அதன் இலை தோரணம் கட்ட உதவும்; மாவடு

ஊறுகாய் போட உதவும். காய் சமைக்க வும் ஊறுகாய் போடவும் உதவும்; பழம் சாப்பிடலாம். அடி மரம் பலகைகள் அறுக்க உதவும்; கிளைகள் விறகாகப் பயன்படும்.

3. தென்னைமரம் ஓங்கி வளரும் மரம்; கிளைகள் இல்லாதது. தென்னை ஓலையைக் கீற்றாக முடைந்து வீட்டுக் கூரை போடுவார்கள். இளநீர், தேங் காய் இவற்றை விற்பனை செய்யலாம். மரம் கூரை வீடுகளுக்குப் பயன்படும்; சிறிய ஆறுகளில் பாலமாக உதவும்.

4. பனைமரம் தென்னையின் இனத் தைச் சேர்ந்தது. பனை நுங்கும் பனம் பழமும் சாப்பிட உதவும். பனை ஓலையால் வீட்டுக் கூரை போடலாம்; கூடை முடையலாம். பனைமரத் துண் டங்கள் வீடு கட்ட உதவும். பனைமரம் சிறிய ஆறுகளில் பாலமாக உதவும். பதநீரைக் காய்ச்சி வெல்லம், கற்கண்டு செய்யலாம்.

5. ஆலமரம் மிகவும் பெரியது. அது பலர்க்கு நிழல் தருவது. மக்கள்

அதன் இலைகளைத் தைத்து உண்கலமாகப் பயன் படுத்துவார்கள். அதன் விழுது பல் துலக்க உதவும். ஆல மரப் பலகைகளையும் துண்டங்களையும் கொண்டு பல பொருள்கள் செய்யலாம். ஆல விதை மிகவும் சிறியது.

### பயிற்சி

I. **பதில் சொல் :—**

1. வாழை மரம் நமக்கு எப்படிப் பயன்படுகிறது?
2. தென்னை, பனை—இவற்றின் பயன் என்ன?
3. மா மரம் எவ்வாறு பயன்படுகிறது?
4. ஆலமரம் எப்படிப் பயன்படுகிறது?

II. **இவற்றைப் படி :—**

1. வாழைமரம் — வாழைக் **கன்று**
   மாமரம் — மாங் **கன்று**
   தென்னைமரம் — தென்னம் **பிள்ளை**
2. வாழைக்காய்கள் **சீப்புச் சீப்பாக** இருக்கின்றன.
   தேங்காய்கள் **குலைகுலையாகக்** காய்க்கின்றன.
   மாங்காய்கள் **கொத்துக் கொத்தாகக்** காய்க்கின்றன.
3. மாவடு **ஊறுகாய்** — மாங்காய் **ஊறுகாய்**
4. மரம் + பலகை = மரப்பலகை
   மரம் + துண்டம் = மரத் துண்டம்
   மரம் + வேர் = மரவேர்
   வாழை + காய் = வாழைக்காய்
   மா + பழம் = மாம்பழம்

# 24. காய்கறித் தோட்டம்



1. இது எங்கள் காய்கறித் தோட்டம். இது பெரியது. இதில் மரங்கள், செடிகள், கொடிகள் இருக்கின்றன.

2. இதில் வாழை மரங்கள், மா மரங்கள், முருங்கை மரங்கள் இருக்கின்றன. வாழைக் காய், மாங்காய், முருங்கைக் காய், முருங்கைக் கீரை கறி சமைக்க உதவுகின்றன.

3. தோட்டத்தில் கத்தரிச் செடி, வெண்டைச் செடி, தக்காளிச் செடி, கொத்தவரைச் செடி இருக்கின்றன. இவற்றிலிருந்து கத்தரிக் காய், வெண்டைக் காய், தக்காளிக் காய், கொத்தவரைக் காய் என்பவை கிடைக்கின்றன. இவை கறி சமைக்க உதவுகின்றன.

4. எங்கள் தோட்டத்தில் அவரைக் கொடி, சுரைக் கொடி, பூசனிக் கொடி, பறங்கிக் கொடி, புடலங் கொடி, பாகற் கொடி இருக்கின்றன. இவற்றில் அவரைக் காய், சுரைக் காய், பூசனிக் காய், பறங்கிக் காய், புடலங்காய், பாகற் காய் என்பவை காய்க்கின்றன.

## பயிற்சி

பதில் சொல் :—

1. தோட்டத்தில் உள்ள மரங்கள் எவை?
2. தோட்டத்தில் உள்ள செடிகள் எவை?
3. தோட்டத்தில் உள்ள கொடிகள் எவை?
4. இப்பாடத்தில் வந்துள்ள காய்களில் வற்றல் போடத்தக்க காய்கள் எவை?

## 25. நாணயங்கள்

இது கால் அணா. இது செம்பு நாணயம்.

இது ஒரு அரை அணா. இரண்டு காலணாக்கள் கொண்டது ஒரு அரை அணா.

இது ஒரு அணா நாணயம். நான்கு காலணாக்கள் கொண்டது ஒரு அணா.

இது இரண்டு அணா நாணயம்; அரைக்கால் ரூபாய் என்றும் சொல்லப்படும்.

இது கால் ரூபாய் நாணயம். நான்கு அணாக்கள் மதிப்பு உடையது ஒரு கால் ரூபாய்.

3307—5

இது அரை ரூபாய் நாணயம். இரண்டு கால் ரூபாய்கள், அல்லது நான்கு இரண்டணு நாணயங்கள் அல்லது எட்டு அணுக்கள் மதிப்பு உடையது அரை ரூபாய்.

இது ஒரு ரூபாய் நாணயம். ஒரு ரூபாய்க்கு இரண்டு அரை ரூபாய்கள்; நான்கு கால் ரூபாய்கள்; எட்டு அரைக்கால் ரூபாய்கள்; பதினறு அணுக்கள்; அறுபத்து நான்கு காலணுக்கள்.

### பயிற்சி

**I. பதில் சொல் :—**

1. இரண்டு அணுவுக்குக் காலணு நாணயங்கள் எத்தனை ?
2. நான்கு அணுவுக்குக் காலணு நாணயங்கள் எத்தனை ?
3. எட்டு அணு நாணயத்துக்கு எத்தனை காலணுக்கள் ?

**II. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்துப் படி :**

1. எட்டணுவுக்கு ——— காலணுக்கள்.
2. கால் ரூபாய்க்குப் ——— காலணுக்கள்.
3. முக்கால் ரூபாய்க்கு ——— காலணுக்கள்.
4. ஒரு ரூபாய்க்குப் ——— அணுக்கள்.

# 26. பழக்கடை

(உரையாடல்)

1. படத்தில் ஒரு கடை காணப் படுகிறது. அந்தக் கடையில் என்ன என்ன பழங்கள் இருக்கின்றன? மாம் பழங்கள், ஆரஞ்சுப் பழங்கள், வாழைப் பழங்கள், பலாப் பழங்கள், ஆப்பிள் பழங்கள், திராக்ஷைப் பழங்கள் இருக் கின்றன.

2. கமலம் தன் தாயாருடன் பழக் கடையில் நிற்கிருள். அவள் தாயாரும் கடைக்காரரும் பேசுகின்றனர்.

க. தாயார் :—ஐயா, மாம்பழம் என்ன விலை?

கடைக்காரர் :—அம்மா, இது சேலம் மாம்பழம்; உயர்ந்தது. இதன் விலை நான்கணா.

க. தாயார் :—ஆரஞ்சுப்பழத்தின் விலை என்ன?

கடைக்காரர்:—டஜன் ஒன்றரை ரூபாய்.

க. தாயார் :—வாழைப்பழம் என்னவிலை?

கடைக்காரர் :—இந்தத் தாற்றில் பத்துச் சீப்புகள் இருக்கின்றன. இந்தத் தாறு மூன்று ரூபாய் விலை.

க. தாயார் :—திராக்ஷை சேர் என்ன விலை?

கடைக்காரர் :—ஒரு சேர் நான்கணா.

க. தாயார் :—இந்தப் பலாப்பழம் விலை என்ன?

கடைக்காரர் :—அதன் விலை ஒரு ரூபாய். அதற்குள் ஏறக்குறைய எண்பது சுளைகள் இருக்கும். கொட்டை பெரிதாக இருக்கும்.

க. தாயார் :—சரி; எனக்கு ஆரஞ்சு ஒரு டஜனும், திராக்ஷை இரண்டு சேரும், இந்தப் பலாப் பழமும் வேண்டும்.

கடைக்காரர் :—சரி, பெற்றுக்கொள்ளுங்கள்.

### பயிற்சி

I. இவற்றைப் படி :—

| | |
|---|---|
| மாம்பழம் | மாங்கொட்டை |
| பலாப்பழம் | பலாக்கொட்டை |
| ஆரஞ்சுப் பழம் | ஆரஞ்சு விதை |
| ஆப்பிள் பழம் | ஆப்பிள் விதை |
| திராக்ஷைப் பழம் | திராக்ஷை விதை |
| வாழைப் பழம் | வாழை விதை |

மாங்கொட்டை வற்றல் குழம்பு உடம்புக்கு நல்லது. பலாக்கொட்டை கறி சமைக்க உதவும்.

II. பதில் சொல் :—

1. பலாத் தோலின் மேற்புறம் எப்படி இருக்கிறது? அதன் நிறம் என்ன?
2. பலாச்சுளை எவற்றுக்கு நடுவில் இருக்கிறது?
3. கொட்டை எதற்குள் இருக்கிறது?
4. பலாக் கொட்டையின் பயன் என்ன?
5. மாங்கொட்டையின் பயன் யாது?
6. சுளைகள் உள்ள பழங்கள் எவை?
7. பலாச் சுளைக்கும் ஆரஞ்சுச் சுளைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

# பயிற்சி—7

## தீபாவளிப் பண்டிகை



**படம் பார்த்து இக்கேள்விகளுக்குப் பதில் சொல் :—**

1. இது என்ன கடை?

2. பையனும் பெண்ணும் கடையில் என்ன வாங்குகிறார்கள்?

3. (1) இது என்ன வீடு?
   (2) பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?

4. வீடு ஏன் தீப்பிடித்துக்கொண்டது?

5. மக்கள் என்ன செய்கிறார்கள்?

6. ஆறும் படத்தில் நீ என்ன பார்க்கிறாய்?

7. ஏழாம் படத்தில் நீ என்ன பார்க்கிறாய்?

8. அடுத்த தீபாவளி அன்று பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?

# 27. பூப்பாட்டு

தமிழரசி தாழம் பூ
மங்கையர்க்கரசி மல்லிகைப் பூ
இசைஅரசி இருவாட்சி
சிவஅரசி செந்தாமரை

நீ என்ன பூ? தாழம் பூ.
நீ என்ன பூ? மல்லிகைப் பூ.
நீ என்ன பூ? இருவாட்சி.
நீ என்ன பூ? செந்தாமரை.

பூ எடுத்து ஆடுவோம்;
பூப் பாட்டுப் பாடுவோம்.

# 28. ஆத்தி சூடி

1. அறம் செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. ஈவது விலக்கேல்.
4. ஊக்கமது கைவிடேல்.
5. எண்ணெழுத்து இகழேல்.
6. ஏற்பது இகழ்ச்சி.
7. ஐயம் இட்டுண்.
8. ஒப்புர வொழுகு.
9. ஓதுவது ஒழியேல்.
10. தந்தை தாய்ப்பேண்.
11. நன்றி மறவேல்.
12. பருவத்தே பயிர்செய்.
13. இளமையில் கல்.
14. தெய்வம் இகழேல்.
15. நன்மை கடைப்பிடி.
16. நூல் பல கல்.
17. சோம்பித் திரியேல்.
18. நோய்க்கு இடங்கொடேல்.
19. வித்தை விரும்பு.
20. வைகறைத் துயில் எழு.

# 29. உலக நீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
   இருக்க வேண்டா.

2. ஒருவரையும் பொல்லாங்கு
   சொல்ல வேண்டா.

3. மாதாவை ஒருநாளும்
   மறக்க வேண்டா.

4. நல்லிணக்கம் இல்லாரோடு
   இணங்க வேண்டா.

5. அஞ்சாமல் தனிவழியே
   போக வேண்டா.

6. அடுத்தவரை ஒருநாளும்
   கெடுக்க வேண்டா.

7. தருமத்தை ஒருநாளும்
   மறக்க வேண்டா.

8. கொலைகளவு செய்வாரோடு
   இணங்க வேண்டா.

9. கற்றவரை ஒருநாளும்
   பழிக்க வேண்டா.

10. கோயில்இல்லா ஊரில்குடி
    இருக்க வேண்டா.

11. எளியாரை எதிரிட்டுக்
கொள்ள வேண்டா.

12. செய்தநன்றி ஒருநாளும்
மறக்க வேண்டா.

13. காணுத வார்த்தையைக்கட்
டுரைக்க வேண்டா.

14. புண்படவே வார்த்தைகளைச்
சொல்ல வேண்டா.

15. மூத்தோர்சொல் வார்த்தைகளை
மறக்க வேண்டா.

16. முன்கோபக் காரரோடு
இணங்க வேண்டா.

17. திறம்பேசிக் கலகமிட்டுத்
திரிய வேண்டா.

18. புறஞ்சொல்லித் திரிவாரோடு
இணங்க வேண்டா.

19. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டா.

20. தெய்வத்தை ஒருநாளும்
மறக்க வேண்டா.

# 30. தமிழ்நாட்டு வணக்கம்




1. தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
   தாயென்று கும்பிடடி பாப்பா.
   அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
   ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

—பாரதியார்

# இந்நூலில் வந்துள்ள புதிய சொற்கள்

பாடம் 1. இந்த - வரும் - வெளிச்சம் - எங்கள் - முன்புறம் - வழியே - பின்புறம் - வீசும்.

2. செடி - கொடி - உண்டு - ஆகும் - முல்லை - இதுதான் - பறிக்கிருள் - நீரில் - பூக்கும் - பெரியது - சிறியது.

3. மரங்கள் - என்பது - பழுக்கும் - நாங்கள் - தின்னுகிறோம் - கொய்யா.

4. இவர் - அவர் - தாயார் - இவன் - அவன் - எழுவர் - தகப்பனுர் - பெற்றோர்கள் - பிள்ளைகள் - இருக்கிறோம் - குடும்பம்.

5. பணம் - சமையல் - சம்பாதிக்கிருர் - பாடம் - வேலை - செய்கிருர் - படிக்கிருன் - எங்களுக்கு - கற்பிக்கிருர்.

6. ஒற்றை - பொருள் - ஓங்க - தந்தை - மற்றை - அன்னை - குலம் - அன்றே ? - மேவி - நல்ல - வளர்ப்பவன் - கருமங்கள் - வாழ்ந்திட - ஏவல்கள் - மக்கள் - யாவரும் - அனைவரும் - நடத்துதல் - கண்டோம்.

7. திங்களூர் - குளிக்க - குளம் - கோவில் - சுற்றி - தெருக்கள் - தோப்புகள் - வாருங்கள் - என்பது - சாவடி.

8. நூறு - பேர் - ஐம்பது - முடியும் - தொடங்கும் - வகுப்பில் - நன்ருய்.

9. ஆண்கள் - பெண்கள் - அதே - அடிப் போம் - கும்மி - கோலாட்டம் - தாண்டுவார்கள்.

10. கிராமம் - எதிரில் - தலையாரி - சாவடி - வெட்டியான் - நிலவரி - வசூலிப்பார் - விசாரிப்பார்- எழுதுகின்றனர் - கணக்கப்பிள்ளை - மணியக்காரர் - வழக்குகள் - இடும் - இருவர்.

11. தச்சர் - முதலியன - இவற்றால் - புடைவை- அழுக்கு - செக்கார் - தட்டார் - பொன் - வெள்ளி - சலவை - தொழிலாளி - நகைகள் - நெசவாளி - போக்கு - எண்ணெய் - பாத்திரங்கள் - கருமான் - இரும்பு - மண்வெட்டி - விற்பார் - மண்பாண்டம் - வேட்டி - அழகு - ஆட்டுவார் - அரிவாள் - கன்னார் - பித்தளை - துண்டு.

12. வைக்கும் - பன்னிரண்டு - நடுவில் - மொத்தம் - அறுபது - நிமிஷம் - நேரம் - முள் - வலப்பக்கம் - மீண்டும் - அடையும் - அப்பொழுது - நகரும் - சொல்லுகிறோம் - என்கிறோம்.

13. தோன்றும் - உச்சி - மறையும் - வியாழன் - வருஷம் - வைகாசி - புரட்டாசி - தை - சேர்ந்தது - நாட்கள் - வாரம் - அல்லது - ஆனி - ஐப்பசி - மாசி - கிழமை - ஞாயிறு - சனி - பெயர் - ஆடி - கார்த்திகை - பங்குனி - மார்கழி - திங்கள் - செவ் வாய் - புதன் - மாதம் -சித்திரை - ஆவணி - காயும்.

14. ஒளி - நிலவு - மாறும் - தேய - குளிர்ச்சி - உருவம் - தெரியாத - பிறகு - குறையும் - அமாவாசை - வளர்பிறை - தேய்பிறை - மாறி மாறி.

15. திசை - நீட்டு - கிழக்கு - மேற்கு - தெற்கு- வடக்கு - பக்கம் - நேராக - இடக்கை.

16. ஆறுல் - இன்று - வானம் - இடி - ஓசை - மறைத்துவிட்டன - இருண்டு - மின்னல் - பெய்கிறது - மழைத்துளி - விடாமல் - ஜில்லென்று - தண்ணீர் - காகிதம் - கேள்.

17. வாழும் - படுகிறது - வாள் - என்று - கரை - கறை - கரி - கறி - நிமிர்த்த - அறுக்கும் - உதிர்கின்றன - ஒலி - முடியாது - அகப்படும் - கனகன - கணகண.

18. கட்டில் - பாய் - அம்மி - உறி - மெத்தை - கண்ணுடி - குழவி - தவலை - கரண்டி - தலையணை - விளக்கு - ஆட்டுக்கல் - அண்டா.

19. பயன் - சிறந்த - உணவு - தயிர் - மோர் - வெண்ணெய் - நெய் - போல - கம்பளம் - நெய்ய - மந்தமான - உழ - இழுக்க - சாமான்கள் - ஏற்றி - போவது - வேகமாக - சவாரி - சுமந்து - மூட்டை - மறப்பது - அன்பு - பாராட்டும் - அடையாளமாக - பணிவு - காக்கும் - திருடும் - பழக்கம் - நடுங்க.

20. சாம்பல் - யாவும் - சாந்து - தரம் - எந்த - சொல்லலாமோ.

21. என்பவை - காரணத்தால் - பெற்றன - முட்டை - குஞ்சு - பொரிக்கும் - கூடு - கட்டும் - ஆதலால் - அரிசி - தானிய மணிகள் - கொண்டை - அடைகாத்து - கொத்தி - கிளறி - புழு - பூச்சி - அழுகின - அலகு - கூவும் - தோகை - விரித்து - இறகு - திரும்ப - செல்வமாக - அசைந்து.

22. துரை - இஷ்டம் - சதங்கை - கோட்டை - ரங்கசாமி - எவளோ - தரை - கொத்தளம் - என்ன - தங்கம் - தடுத்து - கொடுமை.

23. பயிராகும் - தண்டு - பட்டை - உண்கலம் - சீப்பு - தாறு - நிழல் - தோரணம் - வடு - ஊறுகாய் - விறகு - ஓலை - இளநீர் - தேங்காய் - விற்பனை - இனம் - நுங்கு - முடையலாம் - துண்டங்கள் - பாலம் - பதநீர் - வெல்லம் - கற்கண்டு - தைத்து - விழுது - துலக்க - விதை.

24. காய்கறி - சமைக்க - கொத்தவரை - காய்க்கின்றன.

25. நாணயம் - அரைக்கால் - இரண்டணா - மதிப்பு.

26. காணப்படுகிறது - விலை - சேர் - கொட்டை - கடைக்காரர் - சேலம் - சுளை - பெற்றுக்கொள் - ஐயா - டஜன் - ஏறக்குறைய.

27. தமிழரசி - மங்கையர்க்கரசி - இசை அரசி - இருவாட்சி - சிவ அரசி - செந்தாமரை.

135362

THAMARAI VACHAKAM

BOOK II FOR STANDARD II

BY

Dr. M. RAJAMANIKKAM, M.A., L.T., M.O.L., PH.D.

THE NATIONAL PUBLISHING CO.

6, KONDI CHETTY STREET, MADRAS-1

Copyright] [As. 6